ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2280/26 - 2022 මැයි මස 18 වැනි බදාදා - 2022.05.18
*2280/26 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: வ/பி.செய/1/3/4/2021/01.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், வத்தளை பிரதேச செயலகப் பிரிவில், றாகம்பத்துவ சிறு பிரிவில், திக்ஓவிட கிராமத்தைச் சேர்ந்த நில அளவை அதிகாரியினால் தயாரிக்கப்பட்ட இல. மு.பி.கி. 4302 மற்றும் 2022.04.21 ஆந் திகதி ஆரம்ப வரைபடத்தின் துண்டு இல. 01 என அடையாளமிடப்பட்ட முழு அளவில் 0.1258 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழே விபரிக்கப் பட்டுள்ள காணித்துண்டின் விபரங்கள் பின்வருமாறு :

01. **துண்டு இல. 01**

காணியின் பெயர்: முதுராஜவெல வத்தை; விபரம்: கொஸ்வத்தை, நிரந்தரக் கட்டிடங்கள் இரண்டு மற்றும் கலப்புப் பயிர்ச் செய்கையும் உண்டு; உரிமையாளர் : அரசு; ஆரம்ப உரிமையாளர்: ஏ.எல். இரேஷா ஷியாமளி, இல. 37/1, தே.நி.த. ஹேகித்தை, வத்தளை; விஸ்தீரணம்: 0.1258 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக் காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு வத்தளை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பி.ட.டி.சி. ராஜிகா,
பிரதேச செயலாளர்,
வத்தளை.

பிரதேச செயலகம்,
வத்தளை,
2022, மே 17.

EOG 05 - 0084


இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.